அனுப்புநர்: நாள்: 08-10-09

C. செல்வராஜ்
இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு
எண்:55, இரயில்வே பார்டர் ரோடு
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033.

பெறுநர்:

மாவட்ட ஆட்சித் தலைவர்
கடலூர் மாவட்டம்
கடலூர்.

அய்யா,

பொருள்: ஊராட்சி நிர்வாகம் - மதலப்பட்டு ஊராட்சியில் முறைகேடாக அனுக்கிரஹா துணை நகரம் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டது - ஊராட்சி தலைவியை பதவி நீக்கம் செய்ய கோருதல் தொடர்பாக.

பார்வை:
1. மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின் 31-03-2010 தேதியிட்ட விளக்கம் கோரும் குறிப்பாணை.
2. மதலப்பட்டு ஊராட்சித் தலைவியின் 20-04-10 தேதியிட்ட விளக்கம்.
3. நகர் ஊரமைப்பு இயக்குநரின் 26-08-10 தேதியிட்ட 2 கடிதங்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் கடலூர் அவர்களின், கவனத்தை பார்வையில் கண்ட கடிதங்கள் மீதும், அனுக்கிரஹா துணை நகரம் தொடர்பான தகவல் உரிமைச் சட்ட தகவல்கள் மீதும் இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு ஈர்க்க விரும்புகிறது.

அனுக்கிரஹா துணை நகரம் அமைப்பதற்கு சட்டத்திற்கு புறம்பாகவும், முறைகேடான விதத்திலும் வேண்டுமென்றே திட்டமிட்ட செயல்களாலும், முறையற்ற அனுமதி வழங்கப்பட்டிருப்பது பார்வையிலுள்ள கடிதங்கள் மூலம் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. 31-03-2010 தேதியிட்ட விளக்கம் கோரும் குறிப்பாணைக்கு மதலப்பட்டு ஊராட்சித் தலைவி 20-4-10 அன்று விளக்கம் சமர்பித்த பின்னரும், 6 மாத காலமாக மாவட்ட ஆட்சித் தலைவரால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தன்னுடைய விளக்கத்தில் ஊராட்சித் தலைவி தான் படிப்பறிவு இல்லாத காரணத்தால் சட்டத்தையும், வழிமுறைகளையும் படித்து தெரிந்து கொள்ள இயலாத நிலையில், முறைகேடாக அனுமதிகள் வழங்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று நம்பத்தகுந்ததாக இல்லை. அனுக்கிரஹா துணை நகரத்தின் முழு நிலப்பரப்பிற்கும் ஒரே தீர்மானமாக போடுவதற்கு சட்டத்தில் இடமில்லை என்பதனை ஊராட்சி தலைவி அறிந்து வைத்திருக்கிறார். அதனால் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்புகளாக மொத்த விஸ்தீரணத்தை பிரித்து தனித்தனியாக தீர்மானம் இயற்றும் அளவுக்கு சட்டத்தின் நுட்பங்களை அவர் தெரிந்து வைத்திருக்கிறார்.

மேலும், மே 2009ல் போட்ட தீர்மானங்களுக்கு முன்னரே 10-04-2009 ல் அதற்குரிய கட்டணங்கள் வசூ-க்கப்பட்டிருப்பதாக ஆட்சித் தலைவரின் குறிப்பாணையி-ருந்து தெரிகிறது.

அத்துடன் கட்டிட வரைபட அனுமதியில்லாமலேயே கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்பதும், மனை எண் குறிக்கப்படாமலேயே 15-08-2008 தேதியிட்ட தீர்மானம் மூலம் 30 கட்டிடங்களுக்கு அனுமதி அளிக்கபட்டிருக்கிறது என்பதும், குறிப்பாணையி-ருந்து தெரிய வருகிறது. மனை எண் குறிப்பிடப்படாததற்கு களத்துமேடு நிலமாகிய சர்வே எண் 14/2ல் மேற்கண்ட தீர்மானத்தில் அடங்கிய 83, 84, 85, 86 ஆகிய மனை எண்கள் வருவதாலும் மேற்கண்ட மனை எண் குறிப்பிடப்படாமல் இருந்திருக்கலாம். ஆனால் தானப்பத்திரன்படி சர்வே எண் 14/2 (களத்துமேடு) சாலைக்காக தானம் கொடுக்கப்பட்டதாக உள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக 10-05-2007ல் ஊராட்சி தீர்மானம் இயற்ற ஆரம்பித்த காலத்தில் மேற்படி அனுக்கிரஹா துணை நகரப் பகுதியில் ஊராட்சிக்கு தானம் செய்ய வேண்டிய பகுதிகள் தானமாக வழங்கப்படவில்லை. 6-05-10 கடைசியாக இயற்றப்பட்ட தீர்மானம் வரையிலும் கூட அந்த தானம் வழங்கப்படவில்லை. மாறாக, தகவல் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் கேட்க ஆரம்பிக்கப்பட்ட பின்னர் 23-12-2009 ல் தான் ஊராட்சிக்கு சாலைப் பகுதிகள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு காலம் கடந்து பெறப்பட்ட தானத்திலும் சர்வே எண் 14/2 களம் புறம்போக்கு மற்றும் சர்வே எண் 15/3 கோயில் சொத்து ஆகியவற்றை ஊராட்சித் தலைவி தானமாகப் பெற்றிருக்கிறார்.

ஒரு தனி நபரிடமிருந்து புறம்போக்கு நிலத்தை தானமாகப் பெற்று அதன் உண்மை நிலையினை மறைத்து ஊராட்சித் தலைவி செயல்பட்டிருக்கிறார். சுமார் 3 ஏக்கர் பரப்பாக தனித்தனியாக தீர்மானம் இயற்றி அனுமதி வழங்கும் அளவுக்கு திறமையாக செயல்பட்ட ஊராட்சி தலைவிக்கு தனது ஊராட்சிப் பகுதியில் புறம்போக்கு பகுதி எவையென்று தெரியாமல் இருக்க வாய்ப்பில்லை. எனவே நகர் அமைப்பாளருடன் சேர்ந்து ஊராட்சித் தலைவியும் திட்டமிட்டே செயல்பட்டு சட்டத்திற்கு புறம்பாகவும், வருவாய் இழப்பை ஏற்படுத்தும் வகையிலும், செயல்பட்டிருக்கிறார் என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.

கடலூர் வட்டாட்சியரால் 20-09-2007ல் வழங்கப்பட்டுள்ள தடையில்லா சான்றில் ''புல எண் 14/2 0.11.5 ஹெக்டேர் களம் புறம்போக்கு நிலத்தை விண்ணப்பதாரர் எவ்வகையிலும் பயன்படுத்தக்கூடாது...'' என மிகத் தெளிவாக உத்தரவிட்டுள்ளார். சர்வே எண் 15/3ல் 7.5 ஏர்ஸ் கோயில் நிலம் என்பதற்கும், வட்டாட்சியரால் சான்றளிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், அரசுக்கு வருவாய் இழப்பு எதுவும் ஏற்படவில்லை என்ற ஊராட்சித் தலைவியின் கூற்று உண்மைக்கு புறம்பானது. துணை நகரம் அமைப்பதற்கு முறையாக அனுமதி பெறப்பட்டிருந்தால் தற்பொழுது ஊராட்சியால் வசூ-க்கப்பட்டதைவிட மிக அதிகமான தொகை அரசுக்கு வருவாய் வந்திருக்கும். மேலும் துணைநகரில் பொது உபயோகத்திற்காக இன்னும் அதிகப்படியான நிலம் ஒதுக்கப்பட்டிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக கோயில் நிலமும், களத்துமேட்டு புறம்போக்கும் இருக்கக்கூடிய பகுதியில் அதனை உள்ளடக்கி அதைச் சுற்றிலும் துணை நகரம் அமைக்க அனுமதி வழங்குவதற்கு சட்டத்தில் இடமில்லை. புறம்போக்கு நிலங்களும், தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பட்டா நிலமாக மாற்றுவதற்குரிய வாய்ப்பும் தடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேற்கண்ட வகையில் முறைகேடுகளின் ஒட்டுமொத்த உருவாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும், ஊராட்சித் தலைவி செயல்பட்டு, ஒரு தனி நபருக்கு முறையற்ற விதத்தில் லாபம் சம்பாதிக்க உறுதுணையாக, ஊழல் எண்ணத்துடன் செயல்பட்டதோடு மட்டுமில்லாமல் துணை நகரம் அமைப்பதற்கு அரசுக்கு வரவேண்டிய முழு வருவாய் வராமல் இருக்கும் வகையிலும், மதலப்பட்டு ஊராட்சித் தலைவி செயல்பட்டுள்ளார் என்பது தகவல் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களி-ருந்து மிகத் தெளிவாகத் தெரிகிறது.

மேற்கண்ட வகையில் முறைகேடாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும், வருவாய் இழப்பிற்கு காரணமாகவும் செயல்பட்டிருக்கும் ஊராட்சித் தலைவி மீது உரிய நடவடிக்கை எடுக்காமல் கடந்த 6 மாத காலமாக காலம் தாழ்த்தியிருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல் முறையானதாக இல்லை என்பதை இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு சுட்டிக் காட்ட விரும்புகிறது.

எனவே, காலம் தாழ்ந்த நிலையிலும், நகர் ஊரமைப்பு இயக்குநரின் பரிந்துரையை கணக்கில் எடுத்து மதலப்பட்டு ஊராட்சித் தலைவியை உடனடியாக பதவி நீக்கம் செய்து உத்தரவிடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவரை இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு அன்புடன் வேண்டிக் கொள்கிறது.

(C. செல்வராஜ்)

நகல்:

நகர் ஊரமைப்பு இயக்குநர்
சென்னை.